அன்றன்றுள்ள அப்பம் வழங்கும்

# ஒலிவமரக் கன்றுகள்

ஆகஸ்ட் - 2024 | மரம் - 3 | கன்று - 8 | ஆண்டு சந்தா ரூ. 250/- | தனிப்பிரதி ரூ. 25/- | ஆயுள் சந்தா ரூ. 2500/-

கர்த்தருடைய கிருபையோ அவருக்குப் பயந்தவர்கள்மேலும், அவருடைய நீதி அவர்கள்

## பிள்ளைகளுடைய பிள்ளைகள்மேலும்

அநாதியாய் என்றென்றைக்கும் உள்ளது.

சங்கீதம் 103:17



ஆசிரியர்: J. ஜோசப் ஆஸ்பார்ன் ஜெபத்துரை

# மனம் விட்டு உங்களுடன்...



கிறிஸ்துவுக்குள் பாசத்திற்குரிய எனதன்பு **ஒலிவமரக் கன்றுகள்** இதழின் வாசகப் பெருமக்களே! உங்கள் அனைவருக்கும் ஆண்டவர் இயேசுவின் நாமத்தில் வாழ்த்துக்கள். இந்த சிறார் இதழின் வழியாக உங்களை சந்திப்பதில் மிக்க மகிழ்ச்சி அடைகிறேன். இவ்விதழ் உங்கள் அனைவருக்கும் மிகவும் பயனுள்ளதாக இருக்கிறதென உங்கள் கடிதங்கள் தொலைபேசி அழைப்புகள் வாயிலாக அறிய முடிகிறது.

''குழந்தைக்குக் கற்றுக் கொடு'' என்பது உலக வாக்கு. ''குழந்தையிடமிருந்து(ம்) கற்றுக் கொள்'' என்பது வேதாகமத்தின் புதுமையான பார்வை. இதை நானாக சொல்லவில்லை. ''குழந்தைகளாகிய நீங்கள் தான் விண்ணகத்தில் பெரியவர்களாக இருக்கிறீர்கள்'' என்கிறது பைபிள். காரணம், மண்ணில் பிறக்கின்ற எல்லா குழந்தைகளுமே தேவனிடமிருந்தே, தெய்வீக திட்டத்தை சுமந்து தான் பெற்றோர் வழியாக பூமிக்கு வருகிறார்கள். ஆம், ''பிள்ளைகள் கர்த்தரால் வரும் சுதந்தரம், கர்ப்பத்தின் கனி அவரால் கிடைக்கும் பலன்! (வாசிக்க: சங்கீதம் 127:4).

முக்கியமாக, ஆண் குழந்தைகள் மட்டுமே தேவன் அருளும் செல்வம் என வேதம் சொல்லவில்லை. மாறாக, எல்லாக் குழந்தைகளும் தேவனின் செல்வம் என ஆண், பெண் பாகுபாடின்றி கொண்டாடுகிறது வேதம்.

மேலும், சிறியோர்கள் என்பதை வலிமையில் குறைந்தவர்கள் என்றாலும் சிறுபிள்ளைகளுக்கென அவர்களுக்காக நியமிக்கப்பட்ட தேவதூதர்கள் பிதாவின் அருகில் இருக்கிறார்கள் எனும் இயேசுவின் சிந்தனை இனிமேல் நம் மனதில் இருக்கட்டும். அச்சம் விலகட்டும் (வாசிக்க: மத்தேயு 18:10) என்கிறார் இயேசு.

அது மாத்திரமல்ல, இயேசு சிறுவர்களின் பங்களிப்புகளை எப்போதுமே உதாசீனம் செய்ததில்லை. ஐந்து அப்பங்களையும், இரண்டு மீன்களையும் ஐயாயிரம் பேர் உண்டார்கள். அந்த மாபெரும் நிகழ்வுக்குக் காரணமாய் இருந்தது உங்களைப் போன்ற ஒற்றைச் சிறுவன் தான்! அவன் கையிலிருந்த அந்த சின்ன உணவு தான் மாபெரும் அரிய செயல் நடக்க முதற்படியாய் மாறிப் போனது.

முக்கியமாக, குழந்தைகளாகிய நீங்கள் தேவ சாயலில் படைக்கப்பட்டவர்கள் மட்டுமல்ல, தேவனால் அன்பு செய்யப்பட்டவர்களும் நீங்கள் தான்! தேவனின் ஊழியத்தில் பங்கு கொண்டவர்கள். பெரியவர்களுக்கு மாதிரியாய் இருப்பவர்கள். தேவ புகழுக்கும், விண்ணக வாழ்வுக்கும் உரியவர்கள். எனவே அவர்களை எந்தவிதமான பாகுபாடும் இல்லாமல் ஏற்றுக் கொள்ள வேண்டும் என்பதே வேதாகமம் சொல்லும் செய்தியாகும்.

ஆகவே தான் சொல்லுகிறேன் 'நீங்கள் விசேஷமானவர்கள்' உங்களால் நிறைய சாதிக்க முடியும். உங்களுக்காக ஜெபிக்கிறேன். இவ்விதழ் உங்களுக்கு பயனுள்ள வகையில் அமைய வாழ்த்தி உங்கள் கைகளில் சமர்ப்பிக்கிறேன். வாழ்க!

அன்புடனும், அக்கறையுடனும்:
*அங்கிள்.* **J. ஜோசப் ஆஸ்பார்ன் ஜெபத்துரை**



தாவரவியல்

# வெந்தயம்



**... நீங்கள் ஒற்தலாமிலும் வெந்தயத்திலும் சீரகத்திலும் தசமபாகம் செலுத்தி... (மத்தேயு 23:23)** இவ்வசனத்தில் இஸ்ரவேல் மக்களின் அன்றைய வாழ்க்கையில் வெந்தயம் முக்கிய இடம் வகித்துள்ளது என்பதை அறிந்து கொள்ளலாம். வெந்தயம் எனும் சொல் வேதாகமத்தில் ஒருமுறை மட்டுமே இடம்பெற்றுள்ளது.

தமிழில் **வெந்தயம் (Fenugreek)** என நாம் அழைக்கும் உணவு மற்றும் மருத்துவ குணங்களுக்காகவும் வளர்க்கப்படும் மூலிகை செடியாகும். டிரிகோனெல்லா ஃபோனம் கிரேசியம் என தாவரவியல் வல்லுநர்கள் அழைப்பார்கள். வெந்தயத்தை நோய்க்கு வேம்பாகும் என்பார்கள் முன்னோர். வெந்தயம் சித்த மருத்துவத்திலும் ஆயுர்வேதத்திலும் அதிகம் பயன்படுத்தப்படுகிறது. வெந்தய விதைகளில் துளிர்த்தெழும் செடியானது கீரையாகவும், வெந்தைய விதைகள் சுவை மற்றும் மணமூட்டியாகவும் இருக்கிறது.

வெந்தயம் தென்கிழக்கு ஐரோப்பா மற்றும் மேற்கு ஆசியாவை பூர்வீகமாகக் கொண்டது. இந்தியா, அர்ஜென்டினா, எகிப்து, தெற்கு பிரான்ஸ், மொராக்கோ மற்றும் லெபனான் நாடுகளில் பயிரிடப்படுகிறது. இந்தியாவில் இது ராஜஸ்தான், குஜராத், மத்தியப் பிரதேசம், உத்தரப் பிரதேசம், மகாராஷ்டிரா மற்றும் பஞ்சாப் ஆகிய மாநிலங்களில் அதிகமாகப் பயிரிடப்படுகிறது. மிதமான மற்றும் குறைந்த மழைப்பொழிவு உள்ள பகுதிகளில் அனைத்து வகையான மண்ணிலும் வளரும்.

வெந்தய செடி 40-80 செ.மீ உயரம் வரை வளரக்கூடியது. வெந்தய செடியின் பூ, காய், விதை, கீரை என எல்லாமே மருத்துவ குணங்கள் கொண்டது. இதன் இலைகள் வெளிர் பச்சை நிறத்தில் இருக்கும். இதன் காய்கள் 10-15 செ.மீ நீளம் இருக்கும். ஒவ்வொரு காய்களிலும் 10-20 சிறிய கடினமான மஞ்சள் கலந்த பழுப்பு நிற விதைகள் இருக்கும். விதைகள் ஒவ்வொன்றும் 3 மி.மீ நீளம், மென்மையான மற்றும் நீள்வட்டமாக இருக்கும். வெந்தயத்தின் பூக்கள் வெள்ளை, மஞ்சள் அல்லது ஊதா நீல நிறத்தில் இருக்கும். இலைகள் மிகவும் மெல்லியதாக இருக்கும்.



வெந்தயத்தில் நீர்ச்சத்து, புரதச்சத்து, கொழுப்புச் சத்து, மாவுச்சத்து போன்றவைகள் உள்ளன. மேலும் சுண்ணாம்புச் சத்து, மணிச்சத்து, இரும்புச்சத்து, சோடியம், பொட்டாசியம் போன்ற தாதுப் பொருட்களும், தயாமின், ஃபோலிக் அமிலம், ரிபோஃபிளேவின், நியாசின், நிகோடினிக் அமிலம், வைட்டமின் ஏ, பி6, சி போன்றவைகளும் அடங்கியுள்ளன.



### வெந்தயத்தின் மருத்துவ பயன்கள்:

இரத்தத்தின் சர்க்கரை அளவை கட்டுக்குள் வைக்கும். மென்று சாப்பிட்டால் வயிற்று வலி, வயிற்றுக் கடுப்பு, வயிற்று பொறுமல், பேதி குணமாகும். எலும்புகளை பலப்படுத்துகிறது. மூட்டு வலியிலிருந்து நிவாரணம் அளிக்கிறது.

வெந்தயத்தை உலர்வாக அரைத்து தூளாக்கி, கஸ்தூரி மஞ்சளை கலந்து இரண்டையும் சிறிது தண்ணீர் விட்டு குழைத்து, அரிப்புகள் புண்கள் ஏற்பட்ட இடங்களில் தடவி, சிறிது நேரம் கழித்து குளிக்க வேண்டும். இப்படி தொடர்ந்து செய்து வர நோய் குணமாகும். வெந்தயம் ஊற வைத்த நீரை அருந்துபவர்களுக்கு சிறுநீரகங்களில் கற்கள் உருவாவதை தடுக்கும். வெந்தயம் முகப்பொலிவை மெருகேற்றுகிறது. புற்று நோய் உருவாகாமல் தடுக்கிறது. வெந்தயத்தை ஊற வைத்து, அரைத்து தீக்காயத்தின் மீது பூசி வந்தால் தீப்புண் விரைவில் குணமாகும். நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிக்கும். வெந்தயம் நெஞ்சு எரிச்சல் மற்றும் அஜீரணக் கோளாறுகள் போக்குகிறது. ஒரு துண்டு இஞ்சியுடன் கொஞ்சம் வெந்தயம் வைத்து அரைத்து சாப்பிட்டால் பித்தம் விலகும். இரத்த அணுக்களின் உற்பத்தியை வெந்தயம் தூண்டிவிடுகிறது. வெந்தயம் அடிக்கடி சேர்த்து வந்தால் மலச்சிக்கல் வராது. முகப்பரு, சுருக்கம், கரும்புள்ளிகள் மற்றும் கோடு ஆகியவைகள் ஏற்படாமல் தடுக்கிறது. நீர்ச்சத்துடன் இருக்க உதவுகிறது. மயக்கம், சோர்வு, காலை நேர சோர்வு மற்றும் தலைவலி ஆகிய அனைத்தையும் குறைக்க உதவுகிறது.

# கதை விதை கவிதை

ஊரே குருடாகும்... கண்ணுக்கு கண் கதியானால்!
ஊரே பொக்கையாகும்... பல்லுக்குப் பல் பகையானால்!
ஊரே பிணம் வீசும்... பழிக்குப் பழி பலியானால்!
உடைந்த கண்ணாடி முகம் காட்டும்... முழுமை காட்டாது!
அன்பில் ஆளுயரக் கண்ணாடியாவோம்.



நான் உங்களுக்குச் சொல்கிறேன்:
‘‘தீமை செய்பவரை எதிர்க்க வேண்டாம்!’’
(வாசித்து தெளிக: மத்தேயு 5:33-42)

# அவர் வழி எப்பவும் தனி வழி தான்..



மகதலேனா மரியாள் சீமோன் பேதுருவிடமும், இயேசு தனி அன்பு கொண்டிருந்த மற்ற சீஷரிடமும் வந்து, ''ஆண்டவரைக் கல்லறையிலிருந்து யாரோ எடுத்துக் கொண்டு போய்விட்டனர்; அவரை எங்கே வைத்தனரோ, எங்களுக்குத் தெரியவில்லை'' என்றார்.

இதைக் கேட்ட பேதுருவும் மற்றச் சீஷரும் கல்லறைக்குப் புறப்பட்டனர். இருவரும் ஒருமித்து ஓடினர். மற்றச் சீஷர் பேதுருவை விட விரைவாக ஓடி முதலில் கல்லறையை அடைந்தார். அவர் குனிந்து பார்த்தபோது சீலைகள் கிடப்பதைக் கண்டார்; ஆனால் உள்ளே நுழையவில்லை.

அவருக்குப் பின்னாலேயே சீமோன் பேதுருவும் வந்தார். நேரே அவர் கல்லறைக்குள் நுழைந்தார். அங்கு சீலைகளையும், இயேசுவின் தலையை மூடியிருந்த சீலையும் கண்டார். அச்சீலை மற்ற சீலைகளோடு இல்லாமல் ஓரிடத்தில் தனியாகச் சுருட்டி வைக்கப்பட்டிருந்தது.

பின்னர், கல்லறைக்கு முதலில் வந்து சேர்ந்த மற்றச் சீஷரும் உள்ளே சென்றார், கண்டார்; நம்பினார். இயேசு இறந்து உயிர்த்தெழ வேண்டும் என்னும் வேத வாக்கை அவர்கள் அதுவரை புரிந்துகொள்ளவில்லை.

பின்பு சீஷர்கள் நிகழ்ந்ததைக் குறித்துத் தமக்குள் வியப்புற்றவராய்த் தாங்கள் தங்கியிருந்த இடத்திற்குத் திரும்பிச் சென்றார்கள்.

மரியாள் கல்லறைக்கு வெளியே நின்று அழுதுகொண்டிருந்தாள்; அழுதுகொண்டே கல்லறைக்குள் குனிந்து பார்த்தாள். அங்கே வெண்ணாடை அணிந்த இரு கர்த்தருடைய தூதரை அவள் கண்டாள். இயேசுவின் உடலை வைத்திருந்த இடத்தில், ஒருவர் தலைமாட்டிலும் மற்றவர் கால்மாட்டிலுமாக அவர்கள் அமர்ந்திருந்தார்கள்.

அவர்கள் மரியாளிடம், ''ஸ்திரீயே, ஏன் அழுகிறாய்?'' என்று கேட்டார்கள். அவள் அவர்களிடம், ''என் ஆண்டவரை எடுத்துக்கொண்டு போய்விட்டனர்; அவரை எங்கே வைத்தனரோ எனக்குக் தெரியவில்லை'' என்றாள்.

இப்படிச் சொல்லிவிட்டு அவள் திரும்பிப் பார்த்தபோது இயேசு நிற்பதைக் கண்டாள். ஆனால் அங்கு நிற்பவர் இயேசு என்று அவள் அறிந்து கொள்ளவில்லை.

இயேசு அவளிடம், ''ஏனம்மா அழுகிறாய்? யாரைத் தேடுகிறாய்?'' என்று கேட்டார். மரியாள் அவரைத் தோட்டக்காரர் என்று நினைத்து அவரிடம், ''ஐயா, நீர் அவரைத் தூக்கிக்கொண்டு போயிருந்தால், எங்கே வைத்தீர் எனச் சொல்லும். நான் அவரை எடுத்துச் செல்வேன் என்றார்.

இயேசு அவளிடம், ''மரியாளே'' என்றார். மரியாள் திரும்பிப் பார்த்து, ''ரபூனி'' என்றாள். இந்த எபிரேயச் சொல்லுக்கு 'போதகரே' என்பது பொருள்.

இயேசு அவளிடம், ''என்னைத் தொடாதே, நான் இன்னும் என் பிதாவினிடத்திற்கு ஏறிப்போகவில்லை; நீ என் சகோதரரிடத்திற்குப் போய், நான் என் பிதாவினிடத்திற்கும் உங்கள் பிதாவினிடத்திற்கும், என் தேவனிடத்திற்கும் உங்கள் தேவனிடத்திற்கும் ஏறிப்போகிறேன் என்று அவர்களுக்குச் சொல்லு'' என்றார்.

மரியாள் புறப்பட்டுச் சென்று இயேசுவோடு இருந்தவர்களிடம் ''நான் ஆண்டவரைக் கண்டேன்'' என்றாள். தம்மிடம் இயேசு கூறியவற்றையும் அவர்களிடம் சொன்னாள். அவர்கள் துயருற்று அழுதுகொண்டிருந்தார்கள். அவர் உயிரோடு இருக்கிறார் என்றும், மரியாள் அவரைக் கண்டார் என்றும் கேட்டபோது அவர்கள் நம்பவில்லை.

மகதலேனா மரியாளுடன் வந்த மற்ற பெண்கள் கல்றைக்குள் சென்றபோது திடீரென, மின்னலைப் போன்று ஒளிவீசும் ஆடை அணிந்த இருவர் அவர்களுக்குத் தோன்றினர். இதனால் அப்பெண்கள் அச்சமுற்றுத் தலைகுனிந்து நின்று கொண்டிருந்தனர். அவர்கள் அப்பெண்களை நோக்கி, ''நீங்கள் அஞ்சாதீர்கள்; சிலுவையில் அறையப்பட்ட இயேசுவைத் தேடுகிறீர்கள் என எனக்குத் தெரியும். உயிரோடு இருப்பவரைக் கல்லறையில் தேடுவதேன்? அவர் இங்கே இல்லை, அவர் உயிருடன் எழுப்பப்பட்டார். அவரை வைத்த இடத்தை வந்து பாருங்கள்.

கலிலேயாவில் இருக்கும்போது அவர் உங்களுக்குச் சொன்னதை நினைவுபடுத்திக் கொள்ளுங்கள். மனுஷகுமாரன் பாவிகள் கையில் ஒப்புவிக்கப்பட்டுச் சிலுவையில் அறையப்படவேண்டும்; மூன்றாம் நாளில் உயிர்த்தெழ வேண்டும் என்று சொன்னாரே. பேதுருவிடமும் மற்றச் சீஷரிடமும், 'உங்களுக்கு முன்பாக அவர் கலிலேயாவுக்குப் போய்க் கொண்டிருக்கிறார்; அவர் உங்களுக்குச் சொன்னது போலவே அவரை அங்கே காண்பீர்கள்' எனச் சொல்லுங்கள் என்றார்கள். அவர்களும் கல்லறையைவிட்டு விரைவாகப் புறப்பட்டுச் சென்றார்கள். அவர்கள் அச்சமுற்றாலும் அதே வேளையில் பெருமகிழ்ச்சியுற்றவர்களாய் அவருடைய சீஷருக்கு அறிவிக்க ஓடினார்கள்.

திடீரென்று இயேசு அவர்களை எதிர்கொண்டு வந்து வாழ்த்தினார். அவர்கள் அவரை அணுகி அவர் காலடிகளைப் பற்றிக் கொண்டு பணிந்து நின்றார்கள். அப்பொழுது இயேசு

அவர்களிடம், ''பயப்படாதீர்கள்! என் சகோதரர்களிடம் சென்று அவர்களைக் கலிலேயாவுக்குப் போகுமாறு சொல்லுங்கள். அங்கே அவர்கள் என்னைக் காண்பார்கள்'' என்றார். அப்போது அவர்கள் அவருடைய வார்த்தைகளை நினைவிற்கொண்டு, கல்லறையைவிட்டுத் திரும்பிப் போய், இவை அனைத்தையும் பதினொருவருக்கும் மற்ற அனைவருக்கும் அறிவித்தார்கள். அவர்கள் கூற்று வெறும் பிதற்றலாகத் தோன்றியதால் சீஷர்கள் அவர்களை நம்பவில்லை.

கல்லறையைவிட்டு அப்பெண்கள் போய்க்கொண்டிருந்தபோது, காவல் சேவகருள் சிலர் நகரத்திற்குள் சென்று, நிகழ்ந்தவை யாவற்றையும் பிரதான ஆசாரியருக்கு அறிவித்தனர். அவர்கள் மூப்பர்களுடன் கூடிக் கலந்து ஆலோசித்து, சேவகருக்கு மிகுதியாகப் பணம் கொடுத்து, 'நாங்கள் தூங்கிக் கொண்டிருந்தபோது, இயேசுவின் சீஷர் இரவில் வந்து அவரது உடலைத் திருடிச் சென்றுவிட்டனர்' எனச் சொல்லுங்கள். தேசாதிபதி இதைக் கேள்வியுற்றால் நாங்கள் அவரை நம்பச்செய்து, நீங்கள் தொல்லைக்கு உள்ளாகாதபடி பார்த்துக் கொள்வோம்' என்று அவர்களிடம் கூறினார்கள். அவர்களும் பணத்தைப் பெற்றுக்கொண்டு, தங்களுக்கு அவர்கள் சொல்லிக் கொடுத்தவாறே செய்தார்கள். இந்நாள்வரை இந்த வதந்தி யூதரிடையே பரவியிருக்கிறது.

அதன்பிறகு அதே நாளில், சீஷர்களுள் இருவர் வயல்வெளிக்கு நடந்து சென்றபோது இயேசு அவர்களுக்கு வேற்று உருவில் தோன்றினார். அவர்கள் எருசலேமிலிருந்து ஏறத்தாழ பதினொரு கிலோ மீட்டர் தொலையிலுள்ள ஓர் ஊருக்குச் சென்று கொண்டிருந்தனர். அவ்வூரின் பெயர் எம்மாவு. அவர்கள் இந்நிகழ்ச்சிகள் அனைத்தையும் குறித்து ஒருவரோடு ஒருவர் உரையாடிக்கொண்டே சென்றார்கள். இப்படி அவர்கள் உரையாடிக்கொண்டும், வினவிக்கொண்டும் சென்றபோது, இயேசு நெருங்கிவந்து அவர்களோடு நடந்துசென்றார். ஆனால், அவர் யார் என்று அறிந்து உணரமுடியாதவாறு அவர்கள் கண்கள் மறைக்கப்பட்டிருந்தன.

அவர் அவர்களை நோக்கி, 'வழிநெடுகிலும் நீங்கள் ஒருவரோடு ஒருவர் பேசிக்கொண்டிருப்பது என்ன?' என்று கேட்டார். அவர்கள் முகவாட்டத்தோடு நின்றார்கள்.

அவர்களுள், கிலெயோப்பா என்னும் பெயருடைய ஒருவர், அவரிடம் மறுமொழியாக, 'எருசலேமில் தங்கியிருப்பவர்களுள் உமக்குமட்டும்தான் இந்நாள்களில் நிகழ்ந்தவை தெரியாதோ!' என்றார்.

அதற்கு அவர் அவர்களிடம், 'என்ன நிகழ்ந்தது?' என்று கேட்டார்.

அவர்கள் அவரிடம், 'நாசரேத்து இயேசுவைப் பற்றியேதான் பேசுகின்றோம். அவர் தேவனுக்கும், மக்கள் எல்லாருக்கும் முன்பாகச் சொல்லிலும், செயலிலும் வல்ல தீர்க்கதரிசியாகத் திகழ்ந்தார். அவர் இஸ்ரவேலை மீட்கப்போகிறார் என்று நாங்கள் எதிர்பார்த்து இருந்தோம். ஆனால், பிரதான ஆசாரியரும், அதிகாரிகளும் அவருக்கு மரணதண்டனை விதித்துச் சிலுவையில் அறைந்தார்கள். இவையெல்லாம் நிகழ்ந்து இன்றோடு மூன்று நாள்கள் ஆகின்றன.

ஆனால், இன்று, எங்களைச் சேர்ந்த பெண்களுள் சிலர், எங்களை மலைப்புக்குள்ளாக்கினர்; அவர்கள் விடியற்காலையில் கல்லறைக்குச் சென்றார்கள்; அவருடைய உடலைக் காணாது திரும்பி வந்து, கர்த்தருடைய தூதர்களைக் கண்டதாகவும், இயேசு உயிரோடியிருக்கிறார் என்று அவர்கள் கூறியதாகவும் சொன்னார்கள். எங்களோடு இருந்தவர்களுள் சிலரும் கல்லறைக்குச் சென்று, அப்பெண்கள் சொன்னவாறே இருக்கக் கண்டனர். ஆனால் அவர்கள் இயேசுவைக் காணவில்லை என்றார்கள்.

தொடரும்...

# தவக்கா



''அவர்களுடைய தேசம் **தவளைகளைத்** திரளாய்ப் பிறப்பித்தது; அவர்களுடைய ராஜாக்களின் அறைவீடுகளிலும் அவைகள் வந்தது'' (சங்கீதம் 105:30).

**தவளைகள்** நீரிலும் நிலத்திலும் வாழும் வாலில்லாத (Anura) ஈரிடவாழ்விகள் (Amphibians) ஆகும். இவை வாழ்விடம், உணவு, இனப்பெருக்கம் முதலான தேவைகளுக்கு நீர்நிலைகளில், ஈரப்பதமிக்க இடங்களில், மண்ணுக்கடியில், தாவர இலைகளில், மரப்பட்டைகளில், மரப்பொந்துகளில், பாறைகளில், பாலைவனத்தில், பனிமலைகளில், நீர்நிலைகளில், கிணற்றில், பொந்தில் என்று வாழ்விடங்களை சார்ந்துள்ளன. வறண்ட பாலைவனப் பகுதிகளிலும், பனிப்பிரதேசங்களிலும்கூட சில வகைத் தவளையினங்கள் உயிர் வாழ்கின்றன. 6300க்கும் மேலான தவளை இனங்களில் உலகின் 80% தவளையினங்கள் உலகிலுள்ள ஏழு கண்டங்களில், அண்டார்டிகா தவிர மீதமுள்ள ஆறு கண்டங்களிலும் தவளைகள் வாழ்கின்றன.

தவளைகளுக்கு நீண்ட பின்னங்கால்களும், திரண்டு உருண்ட உடலும், விரல்களுக்கு இடையே சதை இணைப்புள்ள பாதங்களும், புறத்தே பிதுங்கி இருக்கும் கண் முழிகளும் கொண்டது. ஆணைவிட பெண் தவளையே அளவில் பெரியதாக இருக்கும்.

நீரில் வாழும் தலைப்பிரட்டைகளை மீன்குஞ்சுகளும், மீன்களும் உணவாக உட்கொள்கின்றன. கொக்கு, நாரை, வாத்து, மீன்கொத்தி போன்ற நீர்ப்பறவைகளுக்கும், கழுகு, பருந்து, ஆந்தை போன்ற ஊனுண்ணிப் பறவைகளுக்கும், பாம்பு, எலி, வௌவால் போன்ற ஊர்வன மற்றும் பாலூட்டி விலங்குகளுக்கும் தவளைகள் உணவாகின்றன. இயற்கைச் சூழலமைப்பின் மிக முக்கிய இடத்தில் இருக்கும் தவளைகள் அழிந்தால், ஒட்டுமொத்த உணவுச் சங்கிலியையும் அது பாதிக்கும்.

எறும்புகள், கரையான்கள், பயிருக்குச் சேதம் விளைவிக்கும் பூச்சிகள் மற்றும் கொசுக்களை வயல்களில் வசிக்கும் தவளைகள் உட்கொள்கின்றன. கொசுக்களின் பெருக்கத்தையும் அவை கட்டுப்பாட்டில் வைத்திருக்கின்றன. மேலும் கொசு முட்டைகளையும், முட்டைப்புழுக்களையும் தலைப்பிரட்டைகள் உட்கொள்வதால், கொசுக்களின் பெருக்கம் ஆரம்பத்திலேயே கட்டுப்படுத்தப்படுகிறது. தவளைகள் மறைந்து விட்டால் உலகம் கொசுக்களின் கூடாரமாகி விடும். இப்படிப் பூச்சிகளின் எண்ணிக்கையைக் கட்டுப்பாட்டில் வைப்பதில் தவளைகள் பெரும் பங்காற்றுகின்றன.



இன்றுவரை, உலகம் முழுவதும் கிட்டத்தட்ட 200 வகையான தவளையினங்கள் முற்றிலும் அழிந்துவிட்டன என்கின்றனர் ஆராய்ச்சியாளர்கள். ஓடைகள், ஆறுகள், கண்மாய்கள், ஏரிகள், குளங்கள், குட்டைகள் என நீர்நிலைகளின் இயற்கைச்சூழல்

கெட்டு, மிகவும் ஆரோக்கியமற்ற நிலையில் அவை இருப்பதற்கான ஓர் வெளிப்பாடுதான் தவளைகளின் அழிவு.


தவளைகள் தோலின் வழியாக சுவாசிப்பவை. உலக வெப்பமயமாதல், காலநிலை மாற்றம், வாழ்விட அழிப்பு, பூஞ்சைகளின் தாக்குதல், இரசாயன பூச்சிக்கொல்லி பயன்பாடு, நீர்நிலைகளில் கலக்கும் தொழிற்சாலைக் கழிவுகளின் நச்சுத்தன்மை காரணமாக தவளைகளின் தோல் வழியாக உடலுக்குள் சென்று அவற்றின் சுவாச மண்டலத்தைப் பாதிப்பதால் செத்துவிடுகின்றன. தவளைகளின் அழிவுக்கு முதன்மையான காரணம் மனித செயல்பாடுகள்தான்.

மீன்களை ஆறுகளிலும், குளங்களிலும் வளர்க்கும் முறை, மனித செயல்களால் தவளைகளை உண்ணும் மண்ணுக்கு அன்னியமான பாம்புகள், கீரிப்பிள்ளைகள், எலிகள், பறவைகள், பூனைகள் போன்ற வேட்டை விலங்குகளின் பரவல் என பல்வேறுபட்ட காரணங்களால் இன்று உலகிலேயே மிக வேகமாக அழியும் உயிரினங்களாக தவளைகள் இருக்கின்றன என்கின்றனர் ஆய்வாளர்கள்.

பழைய ஏற்பாட்டில் எகிப்தியருக்கு வந்த வாதைகளில் திரட்சியான தவளைக் கூட்டங்கள் கொண்ட வாதையும் ஒன்று. இதனால் தவளையை சாபமான விலங்காக கிறிஸ்தவர்கள் கருதுவர். ஆனால், ஒவ்வொரு படைப்பையும் தேவன் படைத்ததற்கு சிறப்பான நோக்கமுண்டு. அதனால் தான் ஒவ்வொன்றையும் படைத்த பின் அவை நல்லது என்று கண்டார் என பதிவாகியுள்ளது. மனிதனின் நன்மைகளுக்காகவே தாவரங்கள், விலங்குகள் மற்றும் பலவற்றை படைத்துள்ளார். இயற்கை சூழலியல் ஆரோக்கியமான நிலையில் இருந்தால் தேவசாயலில் படைக்கப்பட்ட நமக்குத்தான் அதிக நன்மை.

## வாழ்வியல் பாடம்:

ஒவ்வொரு தவளையினமும் நூற்றுக்கணக்கான முட்டைகளை இடும் திறன் கொண்டவை. முட்டைகளிலிருந்து வெளிவரும் தலைப்பிரட்டைகள் - Tadpoles (ஜூனியர் தவளைக்குஞ்சுகள்) நீர்நிலைகளில் இருக்கும் நுண்ணுயிர்களையும், நுண்பாசிகளையும், கொசுவின் லார்வாக்களையும் தின்று முழுத் தவளையாக உருமாற்றம் (Transformation & Transfiguration) பெற்றதும் நீர்நிலையை விட்டு நிலத்திற்கு வரும்.




நீரில் வாழும் தலைப்பிரட்டைகள் செவுள்கள் (Gills) மூலம் சுவாசிக்கின்றன. முழு வளர்ச்சியடைந்த தவளைகள் தோல், மூக்கு மற்றும் வாய் மூலமும் நீரிலும், காற்றிலும் இருக்கும் பிராணவாயுவை உறிஞ்சி உள்ளிழுத்துக் கொள்கின்றன. இது தவளையின் உருவ மாற்றம். இதைப் போல இயேசுவின் பிள்ளைகளாகிய நாம் நாளுக்கு நாள் வளர்ச்சியடைகிறோமா?

## (தமிழ்ச்)சொல்லறிவோம்:

தவ்வித் தவ்வி செல்லும் உயிரி என்பதால் ‘தவளை’ எனப் பெயர் பெற்றது போல, மண்ணினுள், கல்லினுள், மர இடுக்கினுள் நுழைந்து வாழ்வதால் நுழல் என்பர். நுழல் என்பதே பிற்காலங்களில் தவளையை நுணல் என வழக்குச் சொல்லானது. தவளையை பேச்சு வழக்கில் தவக்கா, தவக்கலை என்றும் அழைப்பர்.

## உங்களுக்குத் தெரியுமா:

தவளைகளால் மழை காலங்களில் மட்டுமே இனப்பெருக்கம் செய்யமுடியும். ஆகவே மழைக்கும் தவளைகளுக்கும் நெருங்கிய தொடர்பு உண்டு. இதனால் தான் தவளைக் கத்தினால் மழை வருவதன் அறிகுறி என்பர் நம் முன்னோர்கள்.



## கேளுங்கள் சொல்லப்படும்:

நுணலும் தன் வாயால் கெடும்' என்ற பழமொழியின் சரியான பொருளென்ன?

இரவு நேரங்களில் தனது துணையை அழைக்கவும், மழைக்காலங்களில் ஒவ்வொரு இனத் தவளையும் தனக்கென ஒரு ''ஸ்பெஷல் ஒலி'' வைத்திருக்கின்றது. ஆங்கிலத்தில் Chirp, Whistle, Croak, Ribbit, Peep, Cluck, Bark, Grunt என்று குறிப்பிடுகிறார்கள். ''சில நேரங்களில் இடைவெளியில்லாத டிக்.. டிக்.. டிக்.., என்று ஆரம்பித்து நிதானமான இடைவெளியுடைய டக்..டக்..டக்.., இடைவிடாமல் உச்ச சுருதியை அடையும். சில நேரங்களில் டொக், டொக், டொக். சில நேரங்களில் ஒரே ஒரு முறை க்ராக்கக்க் என குரலெழுப்பி சில நிமிடங்களில் அமைதியடையும். சில நேரங்களில் சரியாக மூடாத குழாயிலிருந்து மெல்லச் சொட்டும் நீரின் ஒலியைப் போன்ற டப்... டப்... டப்... என தினுசு தினுசாக சப்தம் கொடுக்கும். அந்த சப்தத்தை கேட்டு இரை தேடும் பாம்பானது தவளையை பிடித்து தின்னும் என்பது உண்மை. தவளையானது சப்தமிட்டு வலியச் சென்று பாம்பிடம் இரையாக மாட்டிக் கொள்வதை போல, பொல்லாதனவற்றைச் சொல்லி வாழும் அறிவிலி, தன் வாய்ச்சொல்லாலேயே தன்னைத் துன்பத்துக்கு உள்ளாக்கிக் கொள்வான் என்பதைக் குறிப்பதற்கு இப்பழமொழியின் செம்பொருள்.

## பாம்புக்கு காது இல்லை எனும் உண்மை உங்களுக்குத் தெரியுமா:

பாம்புக்கு செவித்திறன் இல்லையென்றாலும், தவளையானது மழை பெய்ததும் மகிழ்ச்சியில் துள்ளி ஆரவாரமாய் தங்கள் வளைகளை விட்டு வெளியே வந்து ஆனந்தமாக குரலை உயர்த்திக் கத்துவதால் ஏற்படும் ஒலி அதிர்வுகளை உடல் தோல் வழியாக உணர்ந்து தவளைகளை பாம்பு இரையாக உட்கொள்ளும். ஆக, தவளையின் ஆர்ப்பாட்டமே அதன் உயிருக்கு உலைவைப்பதால் 'நுணலும் தன்வாயால் கெடும்' என்பர்.

## கொசுறுத் தகவல்:

தவளைகளின் மேல்தோலில் சுரக்கும் ஒருவகை திரவத்தில் வைரஸ், பாக்டீரியா போன்ற கிருமிகளால் ஏற்படும் காய்ச்சல், புற்றுநோய்கள், இருதய நோய்களை குணப்படுத்தும் ஆற்றல் இருப்பதாக கண்டுபிடித்திருக்கிறார்கள் ஆய்வாளர்கள்.

வட ஆப்பிரிக்கக் காடுகளில் காணப்படும் சில தவளை இனங்கள் பாம்புகளையே முழுதாக முழுங்கும் அளவிற்கு திறமையும் உடலமைப்பும் கொண்டிருக்கின்றன. இந்த வகை தவளைகளின் உமிழ்நீரில் மனிதர்களைக் கொல்லும் அளவிற்கு விஷத் தன்மை இருக்கிறதாம்.

## உங்கள் அறிவுத் திறனை சோதிக்கலாமா:

யானை பலம், சிறுத்தை பாய்ச்சல், தவளை வாய், உடும்பு பிடி, கழுகு பார்வை, என விலங்குகளுடன் தொடர்புபடுத்திச் சொல்வது போல விலங்குகளை மனிதர்களின் செயல்களுடன் ஒப்பிடும் சில சொற்களை எழுதுங்கள்.


(எ.கா.: நரித் தந்திரம், முதலைக் கண்ணீர் ..............................., ................................)

## தாவி குதிக்கும் தவளை தண்ணீரை அடைவதற்கு அதற்கு சரியான வழிகாட்டுங்கள்.



# தாவும் தவளை!

தவளையின் படத்தைப் பார்த்து நீங்களே வரையுங்கள் குழந்தைகளே.



# யார் அழைத்தது யார் அழைப்பது

ஒருநாள் ஏரி ஓரமாக இயேசு போதித்துக் கொண்டிருந்தார். அவருடைய போதனையைக் கேட்க வந்த கூட்டம் கட்டுக்கடங்காமல் போய்க்கொண்டே இருந்தது. இயேசு போதனையை நிறுத்திவிட்டு மறுகரைக்குச் செல்ல விரும்பி அருகிலிருந்த சீடரின் படகொன்றில் ஏறி அமர்ந்தார்.

அப்போது வேதபாரகர் ஒருவர் வந்து, 'ஐயா! நானும் உம்முடன் வர எனக்கு அனுமதி தரவேண்டும்' என்றார்.

இயேசு அவரிடம், 'நீர் நல்ல சுகமான வாழ்க்கை வாழ்ந்து பழக்கப்பட்டவர். நரிகளுக்கு வளைகளும், வானத்துப் பறவைகளுக்குக் கூடுகளும் உண்டு. ஆனால் மனுஷகுமாரனுக்கோ தலை சாய்க்கவும் இடம் இல்லை. அதெல்லாம் உமக்கு ஒத்து வராது' என்று கூறி அனுப்பி வைத்தார்.

வந்தவர் யோசனையுடன் திரும்பிச் சென்றபின், இயேசுவும் சீடர்களும் படகில் ஏறி மறுகரைக்குச் செல்லத் துவங்கினார்கள். அந்த ஏரியின் மறுகரை நீண்ட தொலைவில் இருந்தது. எனவே இயேசு படகில் படுத்துத் தூங்கத் துவங்கினார். சீடர்கள் இயேசு கடற்கரையில் பேசியவற்றைப் பற்றி விவாதித்துக் கொண்டிருந்தார்கள்.

'பிறர் உங்களுக்கு என்ன செய்யவேண்டுமென்று விரும்புகிறீர்களோ, அதையே நீங்கள் பிறருக்குச் செய்யுங்கள் என்றாரே.. அது இதுவரை நாம் கேட்டதேயில்லையா?' சீடர் ஒருவர் சொல்ல மற்றவர்கள் ஆமோதித்தனர்.

'பரலோக வாழ்வைப்பற்றி இன்னொன்று சொன்னாரே, இடுக்கமான வாயில் வழியே நுழைய வேண்டும். அதுதான் வாழ்வுக்கான வழி. விரிவான பாதையோ அழிவுக்கானது என்று, அது உனக்குப் புரிந்ததா?'



'புரிந்ததே. பரலோக வாழ்வு வேண்டுமென்றால் தேவனின் வார்த்தைகளின்படி வாழ வேண்டும். அப்படி வாழ்வது மிகவும் கடினமான பாதையில் செல்வதைப் போல, அதைத் தான் அவர் அப்படிக் குறிப்பிட்டார்.'

சீடர்களின் உரையாடல்கள் எதையும் கேட்காமல் இயேசு படகின் ஒரு ஓரத்தில் படுத்துத் தூங்கிக் கொண்டிருந்தார். தண்ணீர் அமைதியாக அவர்களுடைய உரையாடல்களைக் கேட்டுக் கொண்டிருந்தது. கொஞ்ச நேரத்திலேயே யாரும் எதிர்பாராத வகையில் கடல் கொந்தளித்தது. புயல்காற்று வீசியது!

அமைதியாய் இருந்த அந்த கடல்பகுதி ஆக்ரோஷமாய் மாறியது. அலைகள் உயரமாயின. கடலின் கொந்தளிப்பில் படகு நிலை தடுமாறத் துவங்கியது. இதே கடல்வழியில் பலமுறை பயணம் செய்திருக்கிறார்கள். ஆனால் இதுவரை இப்படி ஒரு புயல்காற்று வீசியதில்லை. எப்போதும் அமைதியாகவே இருக்கும் இந்தக் கடல் பகுதிக்கு இன்று மட்டும் என்னவாயிற்று என்று சீடர்கள் பயந்தார்கள்.

கலிலேயா கடல் வடக்கு தெற்காக இருபத்தோரு கிலோ மீட்டர் நீளமும், கிழக்கு மேற்காக பதிமூன்று கிலோமீட்டர் அகலமும் உள்ள ஒரு ஏரிப் பகுதி. மேற்கிலிருந்து குளிர் காற்று வீசும் காலங்களில் இந்த நீர்ப்பரப்பு மிகவும் கொந்தளிப்பாக இருப்பதுண்டு. அந்த நீர்ப்பரப்பில் தான் இயேசுவும் சீடரும் பயணிக்கிறார்கள்.

இயேசுவைப் பார்த்தார்கள். இயேசு அமைதியாகப் படுத்து தூங்கிக் கொண்டிருந்தார்.

'இயேசுவை எழுப்புவோம். வேறு வழியில்லை. இல்லாவிட்டால் நாம் சாக வேண்டியது தான்' சீடர்கள் அனைவரும் பதற்றமடைந்தார்கள். 'இயேசுவே.. காப்பாற்றும். சாகப் போகிறோம்.. காப்பாற்றும்' என்று கத்தினார்கள்.

இயேசு அவர்களைப் பார்த்தார். 'அற்ப விசுவாசிகளே, ஏன் பயப்படுகிறீர்கள்?' என்று சொல்லிவிட்டு கடலைப் பார்த்தார்.

'இரையாதே.. அமைதலாயிரு' காற்றுக்கும், கடலுக்கும் கட்டளையிட்டார் இயேசு.

அவ்வளவு தான். அத்தனை நேரமும் பேய்பிடித்தவனைப் போல அலறிக் கொண்டிருந்த கடல் சட்டென்று அமைதியானது. இந்தக் கடலா அப்படிச் சத்தம் போட்டது என்று நினைக்குமளவுக்குக் கடல் அமைதியாகிவிட்டது.

இயேசு கடலை அடக்கிய நிகழ்வு, வெறும் தண்ணீரை அமைதியாக்கிய நிகழ்வு மட்டுமல்ல. நமது வாழ்க்கையில் ஏற்படுகின்ற புயலை இறை வார்த்தை அடக்கிவிடும் என்பதன் நம்பிக்கை நிகழ்வு. இயேசு கூட இருந்தால் எந்த விதமான கொடுமையான, அச்சுறுத்தும் நிகழ்வுகளும் சாந்தமடைந்து விடும் என்பதன் உத்தரவாதம்.

யோனா, கடவுளின் அழைப்புக்கு எதிர்திசையில் சென்றார்,

கடல் அவரை கபளீகரம் செய்தது.

சீடர்கள் இயேசுவின் அழைப்புக்கு உடன்பட்டுச் சென்றனர்,

கடல் கைகட்டி நின்றது.

<u>கற்றல் இனிதே!:</u>

நமது வாழ்க்கையிலும் வருகின்ற அச்சமூட்டும் நிகழ்வுகளை, அமைதியாய் மாற்ற இயேசுவால் முடியும். ஆனால் அதற்கு ஒரே ஒரு முன் நிபந்தனை உண்டு. ''அக்கரைக்குச் செல்வோம் வாருங்கள்'' என அழைப்பது இயேசுவாக இருக்க வேண்டும். இயேசு அழைக்கும்போது, அவர் அழைக்கும் இடத்துக்கு, அவரோடு சென்றால் இயேசு முழுமையான பாதுகாப்பை அளிக்கிறார்.

# இதுதான்டா சர்ஜிக்கல் ஸ்டிரைக்
## (துல்லிய தாக்குதல்)




தவனமுள்ள ஆத்துமாவைக் கர்த்தர் திருப்தியாக்கி, பசியுள்ள ஆத்துமாவை நன்மையினால் நிரப்புகிறாரென்று, அவருடைய கிருபையினிமித்தமும், மனுபுத்திரருக்கு அவர் செய்கிற அதிசயங்களினிமித்தமும் அவரைத் துதிப்பார்களாக. - சங்கீதம் 107:8-9




நானே திராட்சச்செடி, நீங்கள் கொடிகள். ஒருவன் என்னிலும் நான் அவனிலும் நிலைத்திருந்தால், அவன் மிகுந்த கனிகளைக் கொடுப்பான்; என்னையல்லாமல் உங்களால் ஒன்றும் செய்யக்கூடாது. - யோவான் 15:5

# என்னை காண்பவரே... என்னை காப்பவரே...

''நம்முடைய தேவன், நம் மீது அன்பும் அருளும் மிக்கவராய் இருக்கிறார். எப்போதும் நம் மீது அவர் நோக்கமாய் இருக்கிறார். நாம் கடந்து செல்லும் சூழ்நிலைகள் அனைத்தையும் பற்றி அவர் எப்போதும் சிந்திப்பவராய் இருக்கிறார். எப்போதும் அவருடைய பார்வையை நம்மீது வைத்தபடியே இருக்கிறார்'' என்று சங்கீதம் 139 கூறுகிறது.


ஆம், நாம் எந்த ஒரு ஆபத்தையோ அல்லது பிரச்சினையையோ கடந்து செல்லும் போது, இயேசு நமக்கு உதவி செய்வதுடன் அதில் இருந்து தப்பிக்கவும் வைக்கிறார். பல சமயங்களில் ஆபத்து நேரத்தில் அல்லாமல், அதற்கு முன்பே அவர் நம்மைக் காக்க விரைந்து வருகிறார். துன்பம் வரும்போது காக்கவும் செய்கிறார்.

பரிசுத்த வேதாகமத்தில் தானியேல் 3-ம் அதிகாரத்தில் ஒரு சம்பவம் சொல்லப்படுகிறது. தான் செய்து வைத்த சிலையை வணங்க மறுத்ததால், சாத்ராக், மேஷாக், ஆபேத்நேகோ ஆகிய மூன்று பேரையும் நேபுகாத்நேச்சார் இராஜா அக்கினிச்சூளையில் போடும்படி கட்டளையிட்டான். அந்த அக்கினிச்சூளையையும் வழக்கத்தை விட ஏழு மடங்கு சூடாக்கும்படி ஆணை பிறப்பித்திருந்தான்.

படைவீரர்களில் பலசாலியான சிலர், இராஜாவின் உத்தரவை நிறைவேற்றுவதற்காக சாத்ராக், மேஷாக், ஆபேத்நேகோ மூன்று பேரையும் அவர்கள் அணிந்திருந்த ஆடைகளோடு அவர்களை கட்டி, அக்கினிச்சூளையில் போட தூக்கிக்கொண்டு சென்றனர். ஆனால் சூளை ஏழு மடங்கு அதிகமாய் சூடாக்கப்பட்டிருந்தபடியால் மூன்று பேரையும் தூக்கிச்சென்றவர்களை அந்த தீப்பிழம்புகள் சுட்டெரித்துக் கொன்றது.

தேவனுடைய கரம் சாத்ராக், மேஷாக், ஆபேத்நேகோ ஆகிய மூன்று பேருடன் இருந்தபடியால், தூக்கிச் சென்றவர்களை கொன்ற அக்கினிச்சூளையின் நெருப்பு பிழம்புகள் சாத்ராக், மேஷாக், ஆபேத்நேகோ ஆகியோரை ஒன்றும் செய்யவில்லை. அவர்கள், மூன்று பேரும் எந்தவித பாதிப்பும் இன்றி அக்கினிச்சூளையின் நடுவில் போய் விழுந்தார்கள்.

கட்டப்பட்டவர்களாய் விழுந்த அவர்களின் கட்டுகளை விடுவித்த தேவன், அந்த நெருக்கடியான சூழ்நிலையிலும் அவர்களோடு நெருப்பின் நடுவில் உலாவி அவர்களை



அரவணைத்தார். இதனைக் கண்டு நேபுகாத்நேச்சார் இராஜா, அவர்கள் மூன்று பேரையும் அக்கினிச்சூளைக்குள் இருந்து வெளியே வரும்படி கூறினான்.

இராஜாவின் அழைப்பின்படி அவர்கள் அந்த நெருப்பு பிழம்பைக் கடந்து வெளிவரும் போதும் கூட, அந்த அக்கினி சூளை அணைக்கப்படவில்லை. எரிந்து கொண்டுதான் இருந்தது. தேவன் அவர்களோடு இருந்து பாதுகாத்தபடியால், கொட்டும் அருவி தண்ணீரின் ஒருபுறம் இருந்து மறுபுறம் ஊடாக கடந்து வருவது போல், அந்த நெருப்பு பிழம்புகளை கடந்து வந்தனர். அவர்கள் வெளியே வந்தபோது அவர்கள் மீது நெருப்புப் புகையின் நாற்றம் கூட இல்லை. அவர்களுடைய தலைமுடி மற்றும் அவர்கள் அணிந்திருந்த ஆடைகளுக்கு எந்த பாதிப்பும் இல்லை என்பதை பரிசுத்த வேதாகமத்தின் வாயிலாக அறிகிறோம்.

இந்த நிகழ்வு மட்டுமல்ல, தானியேல் சிங்கக் குகையில் தூக்கி போடப்பட்ட போது, அவர் உள்ளே விழுந்த பிறகு அல்ல, அதற்கு முன்பே சிங்கத்தின் வாய்கள் தேவனால் கட்டப்பட்டிருந்தன.

இதற்குக் காரணம் அவர்களுடைய பிரச்சினையின் போதல்ல, அதற்கு முன்பே தேவனுடைய கரம் அவர்களுடன் இருந்து பாதுகாத்தது என்பதை நம்மால் அறிய முடிகிறது. இன்றும் தேவன் தாமாகவே நம்முடைய பிரச்சினையின் போது அல்ல, அதற்கு முன்பிருந்தே நமக்கு உதவி செய்ய வல்லவராய் இருக்கிறார். அதனால்தான் எத்தகைய பிரச்சினைகளை நாம் சந்திக்க நேர்ந்தாலும், அவை நம்மை எந்த வகையிலும் பாதிக்காத வகையில் இயேசு நம்மை காப்பார் என்பதை உணர்ந்தவர்களாய், இன்னும் அதிகமாய் தேவனோடு நெருங்கி வாழ்வோம்.

---

வாழ்க்கை என்பது தேவன் தரும் சலுகை.

காலத்தின் அருமையை உணர்ந்தவர்கள் சாதனையாளர்கள். நம் அனைவருக்கும் காலம் பொதுவானது. கிடைக்கின்ற காலத்தை வீணான பொழுதுபோக்குகளில் செலவழிப்பவர்கள் வாழ்வில் வெற்றிபெற இயலாது.




உங்கள் நேரத்தை உங்கள் இலக்குகளை அடையும் முயற்சிக்காக செலவிடுங்கள்.

வாழ்க்கை என்ற கடிகாரத்திற்கு ஒரு முறை தான் சாவி கொடுக்கப்படுகிறது.

நாட்கள் பொல்லாதவைகளானதால் காலத்தைப் பிரயோஜனப்படுத்திக்கொள்ளுங்கள் (எபேசியர் 5:16).

---

**நான் உங்களில் அன்பாயிருக்கிறதுபோல நீங்களும் ஒருவரிலொருவர் அன்பாயிருக்கவேண்டுமென்பதே என்னுடைய கற்பனையாயிருக்கிறது.**

யோவான் 15:12



# சாத்ராக், மேஷாக், ஆபேத்நேகோ ஆகியோர் தொடர்புடைய சொற்களை கண்டு வட்டமிடுக.

சாத்ராக்
பாபிலோன்
ஆபேத்நேகோ
அக்கினி
மேஷாக்
சூளை
நேபுகாத்நேச்சார்
பொற்சிலை
மூன்று புருஷர்
ஆராதனை
ஏழுமடங்கு
தூதன்



| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| தூ | த | ன் | கா | ரு | லோ | ஆ | ரா | த | னை |
| னை | நே | சூ | மே | ஷா | க் | பா | பு | ன் | லோ |
| கு | பு | சா | த் | ரா | க் | பி | ரு | கா | ஏ |
| பொ | கா | ட | ன் | ஏ | ற் | லோ | ர் | னை | ழு |
| ற் | த் | ரு | பி | கு | பு | ன் | த் | சூ | ம |
| சி | நே | மூ | ன் | று | பு | ரு | ஷ | ர் | ட |
| லை | ச் | சூ | கா | ஆ | பே | த் | நே | கோ | ங் |
| பு | சா | ளை | த் | ன் | ட | சி | பி | ரு | கு |
| ன் | ர் | லோ | சூ | னை | அ | க் | கி | னி | கா |

# யோனா சொல்லாம போனா...

நினிவே நகருக்கு ஓடினார். நினிவே நகர வீதிகள் எங்கும், ‘இன்னும் நாற்பது நாட்களிலே நினிவே அழிக்கப்படும்’ என்று அறிவித்தார்.

‘நினிவே அழிக்கப்படுமா? யார் நீ... எங்கிருந்து வருகிறாய்?’ மக்கள் கேள்வி கேட்டனர்.

‘நான் தேவனிடமிருந்து வருகிறேன்’ என்று சொன்ன யோனா, தன் கதையை முழுவதும் மக்களுக்குத் தெரிவித்தான். மக்கள் திகிலடைந்தார்கள். செய்தி மன்னனின் காதுக்குப் போயிற்று. மன்னனும் கலங்கினான். தன் நாடு தவறான பாதையில் தான் போகிறது என்பது அவனுக்குத் தெரிந்திருந்தது. எனவே உடனடியாக ஒரு ஆணை பிறப்பித்தான்.

‘இன்றிலிருந்து நாற்பது நாட்கள் எல்லோரும் உபவாசம் இருக்க வேண்டும். கால்நடைகளுக்குக் கூட உணவளிக்கக் கூடாது. மனிதர் அனைவரும் தங்கள் ஆடம்பர ஆடைகளை அவிழ்த்து விட்டு கோணிகளைக் கட்டிக் கொண்டு சாம்பலில் அமர்ந்து தேவனிடம் மன்னிப்புக் கேட்க வேண்டும்... இது அரச ஆணை. யாரும் மீறக்கூடாது! நம்முடைய உபவாசத்தின் பொருட்டாகிலும் தேவன் நம் நகரையும், நம்மையும் காக்கட்டும்’ என்று நகரெங்கும் அறிவித்தான்.

நினிவே நகர் முழுவதும் அந்த ஆனை புயல் வேகத்தில் அறிவிக்கப்பட்டது.

மக்கள் அனைவரும் அதன்படியே செய்தார்கள். எல்லோரும் கோணி உடுத்தி, ‘தேவனே எங்களை மன்னியும், இனிமேல் தவறிழைக்க மாட்டோம்’ என்று வேண்டினர்.





அவர்களுடைய கூட்டுப் பிரார்த்தனை பலனளித்தது. மக்கள் மனம் திருந்திவிட்டதைக் கண்ட தேவன் நினிவேயை அழிக்கவில்லை. மக்கள் மகிழ்ந்தனர்.

யோனா மட்டும் கோபமடைந்தார். 'தேவனே என்ன இது? நகர் அழியும் என்று அறிவித்த நான் இப்போது உண்மையிலேயே பைத்தியக்காரனாகி விட்டேன். நீர் நகரை அழிக்காமல் என்னை அவமானத்துக்குள்ளாக்கி விட்டீர்' என்று சினந்தான்.

'சினங்கொள்ளாதே யோனா... உன்னால் தான் நகர் திருந்தியிருக்கிறது என்று திருப்தி கொள். நான் நினிவேயை அழிக்காத காரணம் விரைவில் உனக்கே விளங்கும்' என்றார்.

யோனா கோபத்துடன் நகரை விட்டு வெளியேறினார். நகருக்கு வெளியே தூரத்தில் பொட்டல் காட்டில் ஒரு சின்ன பந்தல் அமைத்து அதன் நிழலில் அமர்ந்தார். தேவன் என்ன செய்யப் போகிறார் என்று தூரத்திலிருந்து பார்க்க வேண்டும் என்று எண்ணிக் கொண்டார்.

அவருக்கு அருகே ஒரு ஆமணக்குச் செடி சட்டென முளைவிட்டது. அது ஒரு செடியாக வளர்ந்தது. தனிமையில் இருந்த யோனா அதைக் கண்டு மகிழ்ந்தார். அதன் நிழலிலேயே தங்கி, அதனை ஒரு ஜீவன் போலப் பாவித்து அதனுடன் பேசிக் கொண்டிருந்தார்.

மறுநாளிலோ கிழக்குவெளுக்கும் நேரத்தில் தேவன் ஒரு பூச்சியைக் கட்டளையிட்டார்; அது ஆமணக்குச் செடியை அரித்துப்போட்டது; அதினால் அது காய்ந்துபோயிற்று.

யோனா மிகவும் வருத்தமடைந்தார். 'தான் நேசித்த தன்னுடைய செடி அழிந்து விட்டதே என்று மிகவும் கவலையடைந்தார். நானும் செத்துப் போயிருக்கலாம். எனக்கு வாழ்க்கை வெறுத்துவிட்டது. எனக்கும் மரணம் வரட்டும்' என்று கூறி குப்புறப்படுத்துக் கொண்டார். தேவன் யோனாவை அழைத்தார்.

'யோனா... என்னாயிற்று உனக்கு? ஏன் கலங்குகிறாய்?'



‘தேவனே... என்னுடன் தோழமை கொண்டிருந்த ஒரே ஒரு செடியும் சட்டென்று வாடிவிட்டதே. அதன் அழகிய இலைகளும், நிறமும் எல்லாம் போய்விட்டதே. பட்டுப் போன செடியைப் பார்க்கப் பார்க்க என்னால் தாங்க முடியவில்லை.’

‘அது ஒரு சின்னச் செடிதானே?... விட்டு விடு. ஏன் வருத்தப்படுகிறாய்?’ என்று கேட்டார்.

‘சின்னச் செடிதான். ஆனால் நான் மிகவும் நேசித்த செடியல்லவா அது...’ யோனா பதில் சொன்னான்.

‘மரணம் வரட்டும் என மன்றாடும் அளவுக்கு நேசித்தாயா அதை?’ தேவன் கேட்டார்.

‘ஆம் கடவுளே.. என்னைக் கொன்றுவிடும். எனக்கு வாழப் பிடிக்கவில்லை’ யோனா வெறுப்பாகப் பேசினார்.

‘நீ விதைக்காத ஒரு விதையிலிருந்து முளைத்த ஒரு செடி அது. அதற்கு நீ நீரூற்றக் கூட இல்லை. அதன் மீது நீ இவ்வளவு பாசம் வைக்கும் போது, நான் படைத்து பராமரித்து வரும் நினிவே நகரின் இலட்சக்கணக்கான மக்கள் மீது நான் இரக்கம் காட்டியது தவறா?’ ஆண்டவர் கேட்டார்.

யோனா வினாடி நேரத்தில் புத்தி தெளிந்தார்.

‘தேவனே என்னை மன்னியும். நான் சுயநலவாதியாய் சிந்தித்து விட்டேன். இப்போது உண்மை உணர்கிறேன். நான் அழியும் என்று சொன்ன நகர் அழிய வேண்டும் என்று அகந்தை கொண்டுவிட்டேன். உம்முடைய மனதை அறிந்து கொள்ள நான் முயற்சி செய்யவேயில்லை. என்னை மன்னியுங்கள்’ என்று பணிந்தார்.

அவர் நிமிர்ந்தபோது மனதுக்குள் சொல்ல முடியாத நிம்மதி நிறைந்திருந்தது.

முற்றும்...

# என் மண் என் மக்கள்



| உலக உயிர்மநேய தினம் |

நிலமே மனித வாழ்வின் அடிப்படை (வாசிக்க: சங்கீதம் 115:16).

வசிக்கும் இடமாக இருந்த நிலம், வெறுமனே ரசிக்கும் இடமாக மாறியபிறகு வாழ்க்கை சவால்களைச் சந்திக்க ஆரம்பித்தது. நாம் மண்ணிலிருந்து படைக்கப்பட்டு, மண்ணுக்கே திரும்புகிறோம். தேவன் நம்மை மண்ணைச் செழுமையாக்கவும், மண்ணினால் செழுமையாகவும் (மண்ணைப் பண்படுத்த, பயன்படுத்த) பணித்தார். உலகின் முதல் மனிதன் விவசாயியே! விவசாயத்தில் வாழ்வோரெல்லாம் தனது பசியை ஆற்ற முடியாமல் பரிதவிக்கின்ற நிலைக்கு இன்று தள்ளப்பட்டுவிட்டான்.

பல வேளைகளில் கிறிஸ்தவர்களாகிய நாம், நமது நிலத்தைப் பற்றியும் நமது வளத்தைப் பற்றியும் கண்டு கொள்வதில்லை என்பது கசப்பான உண்மை. பைபிளின் ஒரு காகிதம் கிழிந்து விட்டால் பதட்டப்படும் நாம், குப்பைகளினால் நிலம் பாழ்படுத்தப்படும் போது சலனமே இல்லாமல் அமைதி காக்கிறோம். 'தேவனுக்காக வைராக்கியமாய் நிற்பேன்' என சூளுரைக்கும் நாம், நமது நீர் நிலைகளை மாசுபடிவதை சற்றும் குற்ற உணர்ச்சியின்றி பார்த்துக் கடக்கிறோம்!

தேவகுமாரன் இயேசு, தனது பயணத்தில் வெறும் ஆன்மிக மீட்பை மட்டும் போதிக்கவில்லை. ஒரு மனிதனுடைய உலக வாழ்க்கைக்கான தேவைகளையும் அவர் சந்தித்துக் கொண்டே தான் இருந்தார். உடல் நிலை சரியில்லை என வந்தவனிடம், முதலில் உன் ஆன்மாவைக் கவனி என அனுப்பி வைக்கவில்லை. பசியாய் இருந்த மக்களிடம், செவிக்குணவு போட்டாயிற்று கிளம்பிப் போ என சொல்லவில்லை. மாறாக அவர்களின் உலகத் தேவைகளையும் சந்தித்தார்.

இன்னும் ஒரு படி மேலே போய், ஏழை எளிய மக்களின் வாழ்வுக்கு எதிராய் நின்ற ஆதிக்க சக்திகளை அவர் எப்போதுமே எதிர்த்தார். அவர்கள் நல்ல முறையில் வாழ்கின்ற ஒரு சூழலை ஏற்படுத்திக் கொடுக்கவேண்டும் என்றே போதித்தார். அவர்கள் சார்பாய் நிற்கவேண்டும் என்றே சிந்தித்தார்.

இன்று நாம் சக மனிதனுடைய வாழ்வுக்கும், அவனுடைய நலத்துக்கும் எதிராகச் செய்கின்ற எல்லா செயல்களுமே பாவமானவை தான். உலகும் அதிலுள்ள அனைத்து படைப்புகளும் தேவனுடையவை என்றும், எல்லா படைப்புகளும் தேவனைப் புகழ்கின்றன என்றும் நாம் பைபிளில் வாசிக்கிறோம். மனிதனைப் படைத்த தேவன் தான் இயற்கையைப்

படைத்தார். சொல்லப் போனால் மனிதனைப் படைக்கும் முன்பே அவர் பூமியைத் தான் படைத்தார்! அவர் படைத்த ஒன்றை அழிவுக்குள் தள்ளுவது என்பது, அவரது விருப்பத்தை உதாசீனப்படுத்துவதன்றி வேறில்லை. நமது உடல் தேவன் வாழும் ஆலயம்! இறைவனின் ஆலயத்தை நாம் கெடுத்தால், தேவன் நம்மைத் தண்டிப்பார். தேவனின் ஆலயமான எத்தனையோ கோடி மனிதர்கள் தானே இந்த சுற்றுச் சூழல் சீர்கேட்டினால் பாதிக்கப்படுகிறார்கள்?

வேதாகமத்தில் இடம்பெற்றுள்ள நபர்களில் பெரும்பாலானோர் விவசாயிகளாக, மேய்ப்பர்களாக இருந்திருக்கிறார்கள். பறவைகள், கடல்வாழ் உயிரினங்கள் தீர்க்கதரிசிகளைப் பாதுகாத்து காப்பாற்றியிருக்கின்றன. தனது போதனைகள் எங்கும் இயற்கையையே முதன்மைப்படுத்தி இயேசு போதிக்கிறார். அவர் விதைப்பவனாகிறார், நிலங்களைப் பேசுகிறார், களைகளைப் பேசுகிறார், பறவைகளைப் பேசுகிறார், ஆடுகளைப் பேசுகிறார். இயேசுவின் போதனைகளோடும், இறைமனிதர்களின் வாழ்க்கையோடும் பின்னிப் பிணைந்திருந்த இயற்கை எனும் தொப்புழ் கொடியை தயவு தாட்சண்யமில்லாமல் இன்று நாம் நறுக்கிக் கொண்டிருக்கிறோம்!

நீர் வளத்தை நாம் சீர்கெடுக்கும் போது மீனவ சமூகத்துக்குத் துரோகம் இழைக்கிறோம். நிலத்தை நாம் கெடுக்கும் போது விவசாய உறவுகளுக்கு கெடுதல் செய்கிறோம். காற்றையும் வான் வெளியையும் நாம் நமது சுயநலத்துக்காய் சீர்கெடுக்கும் போது ஒட்டு மொத்த மனித குலத்துக்கே பாதகம் செய்கிறோம். இந்த சிந்தனைத் தெளிவு கிறிஸ்தவர்களுக்கு இருக்க வேண்டியது அவசியம்.

இயற்கை கொஞ்சம் புரண்டு படுத்தாலே மனுக்குலம் அழிந்து விடும் என்பதை நில நடுக்கங்கள் நமக்குச் சொல்லிச் செல்கின்றன. வானம் கொஞ்சம் முரண்டு பிடித்தால் உலகம் அழியும் என்பதை நோவாவின் காலம் நமக்கு எடுத்துச் சொல்கிறது. பணம் இருக்கிறது, வசதி இருக்கிறது என்பதற்காக இயற்கைச் சீர்கேட்டைக் கண்டுகொள்ளாமல் இருப்பவர்களை குறித்து என்ன சொல்வதென்றே தெரியவில்லை.



எனவே, நமது பார்வை இயற்கையை நோக்கித் திரும்ப வேண்டும். ஆலயத்திலுள்ள ஒரு சிலுவையை உடைத்து விட்டார்கள் என்பதற்காகக் கொதித்து எழுகின்ற கிறிஸ்தவம், ஒரு காட்டை அழிக்கும் போது கள்ள மௌனம் காட்டுவது மாபெரும் பிழை. கிறிஸ்தவனை அவமானப்படுத்தி விட்டான் என கதறும் கிறிஸ்தவம், கனிம வளங்கள் கடத்தப்படும் போது ‘அதெல்லாம் அரசியல்’ என ஒதுங்கிச் செல்வது மாபெரும் பாவம்.

நம்முடைய அடுத்த தலைமுறைக்கு விசுவாசத்தைக் கற்றுக் கொடுப்பதைப் போலவே இயற்கையைப் பேணுவதையும் கற்றுக் கொடுக்க வேண்டும். நமது மண்ணில் விளைகின்ற பொருட்களைச் சாலையோரக் கடைகளில் வாங்குவது, நெகிழிப் பயன்பாட்டை ஒழிப்பது, தண்ணீரைச் சிக்கனமாய்ப் பயன்படுத்துவது, இயற்கை வளங்களைச் சேதப்படுத்தாமல் இருப்பது, மரம் நடுவது என சின்னச் சின்ன விஷயங்களில் அவர்கள் இயற்கையை நேசிக்கலாம் என்பதைக் கற்றுக் கொடுக்க வேண்டும்.

இயற்கையை நேசிப்போம், அதன் மூலம் தேவனை நேசிப்பதை உறுதி செய்வோம்.

ஆம் நம் நிலம்! நம் கடமை!

# ஊக்கமது கைவிடேல்

| நீடியபொறுமை - Long Suffering |

நதியைக் கவனித்திருக்கிறீர்களா? சமதளத்தில் மென்மையாக ஓடிக் கொண்டிருக்கும். பாறைகளின் இடையே ஓடும் போது சலசலவென தாவி ஓடும். அருவியில் வருகையில் உடைந்து வீழும். ஆனால் விழுந்த இடத்திலேயே காலொடிந்து கிடப்பதில்லை. ஆக்ரோஷம் கூட்டி இன்னும் அதிக வேகமாய் ஓடும்!

தடைகள் இல்லாத பயணமே கிடையாது. தடைகளைத் தாண்டி ஓட வேண்டும். ஐயையோ தடை வந்துவிட்டதே என உடைந்து போய் உட்கார்ந்தால் வெற்றி கிடைக்காது! தடைகள் வரும்போது, வேகம் குறையலாம், அல்லது தாமதம் நேரலாம். ஆனால் முறியடித்து முன்னேறுவதில் தான் சாதனைகள் அடங்கியிருக்கின்றன!

போதை! இன்று, நேற்றல்ல, உலகில் எது தடை செய்யப்பட்டாலும் அது நம்ம ஊரில் கிடைக்கிறது. இன்றைக்கு இளைஞர்களுக்கு போதை வஸ்துகள் எப்படி கிடைக்கின்றன என இங்கிலாந்தில் ஒரு ஆய்வு நடத்தினார்கள். ''நெட்ல எல்லா மேட்டரும் இருக்கு'' என 64% இளைஞர்கள் பதில் சொன்னார்கள்!

போதைக்கு அடிமையாவது போல இணையத்துக்கு அடிமையாவதும் ஒரு மிகப்பெரிய பலவீனமே! பாலியல், விளையாட்டு, சமூக வலைத்தளம், வலைப்பூக்கள், மின்னஞ்சல், சேட்டிங், ஷாப்பிங் இவையெல்லாம் தான் இணைய அடிமைகள் அடிமையாகும் இடங்கள். மருத்துவம் இதை இன்டர்நெட் அடிக்ஷன் டிஸார்டர் (IAD) என்கிறது. இளைஞர்கள் இன்றைக்குத் தாண்ட வேண்டிய இன்னொரு தடை இந்த இணைய அடிமைத்தனம்.

ஆசிரியர்களை பாடங்கள் சொல்லித் தரும் பணியாளர்களாய் தான் பெற்றோர் பார்க்கின்றனர். பெரும்பாலான ஆசிரியர்களும் இதை ஊதியம் தரும் ஒரு வேலையாகத் தான் பார்க்கிறார்கள். மாணவர்களின் மனதில் வன்முறை எண்ணங்கள் பெருக நல்வழிப்படுத்தாத ஆசிரியர்கள் ஒரு காரணம். ஆசிரியர்களுக்கு அந்த உரிமையைக் கொடுக்காத பெற்றோர் இன்னொரு காரணம். போதாக்குறைக்கு தொலைக்காட்சிகள், திரைப்படங்கள், போன்றவை வன்முறையையும், அதன் நுணுக்கங்களையும் சொல்லித் தந்து விடுகின்றன.

மேலைநாட்டு பிரச்சினையாய் இருந்த Obesity எனும் அதிக உடல் பருமன் இன்றைக்கு வீட்டுக்கு வீடு! காரணம் ஆரோக்கியமற்ற வாழ்க்கை மற்றும் உணவு முறை! பழைய வாழ்க்கை இளைஞர்களை நடக்க வைத்தது. அவர்கள் உடல் உழைப்பை செலுத்தினார்கள். ஓய்வு நேரத்தில் நீச்சலடித்தார்கள், ஓடியாடி விளையாடினார்கள். உடல் கட்டுக்கோப்பாய் இருந்தது.

ஓய்வு நேரத்தில் ஆடாமல் அசையாமல் தொலைக்காட்சி! இன்னும் நேரம் கிடைத்தால் வீடியோ கேம், அல்லது இன்டர்நெட். இப்படி, உடலானது பராமரிப்பில்லாத ஒரு கூடாரம் போல சிதிலமடைந்துக் கிடக்கிறது. பல இளைஞர்கள் பெயரளவில் இளைஞர்கள், உடலளவில் முதியவர்கள் என்பது தான் உண்மை! இளைஞர்கள் தாண்ட வேண்டிய இன்னொரு தடை இது!

மருத்துவமனை, நூலகம், தொழுகை கூடங்கள் இவற்றிலெல்லாம் அமைதியைக் கடைபிடிக்க வேண்டும் என்பது அடிப்படை நாகரீகம்! பொது இடத்தில் அமைதியைக் கடை பிடிப்பது. பண்புடன் நடந்து கொள்வது. பெரியவர்களிடம் அன்புடன் நடந்து கொள்வது.

சமூகக் கடமையோடு இருப்பது என இளைஞர்கள் கற்க வேண்டிய விஷயங்கள் நிறைய உண்டு.

பண்டைய காலத்தில் குருகுலத்தில் குருவை முன்னுதாரணமாய்க் கொண்டு அறிவிலும் ஞானத்திலும் வளர்ந்தார்கள் நமது தமிழ் இளைஞர்கள். இன்றைக்கு அவர்களுக்கு முன்னுதாரணமாக இருப்பவர்கள் பெரும்பாலும் திரை வசீகரங்களோ, விளையாட்டு வீரர்களோ, அல்லது பணக்கார தலைவர்களோ தான்.

அதிலென்ன தப்பு என்று கேட்பவர்கள் உண்டு. வெற்றியாளர்களின் வாழ்க்கையை அலசி, நல்ல அம்சங்களை எடுத்தால் பாராட்டலாம். ஆனால் பெரும்பாலும் நாம் அவர்களுடைய புகழ் பாடும் சுவரொட்டிகளாக மாறி விடுகிறோம். ஒரு நல்ல முன்னுதாரணத்தையும், ஒரு நல்ல வழிகாட்டியையும் கொண்டிருப்பது வெற்றிக் கதவை தொட்டுத் திறக்க அவசியத் தேவை! தவறான முன்னுதாரணங்களைத் தாண்டி ஓட வேண்டியது இளைஞர்கள் செய்ய வேண்டிய அடுத்த தாவல்!



இளைஞர்கள் உறவு ரீதியான சிக்கல்களை எதிர்கொள்ளும் பக்குவம் இல்லாமல் இருக்கிறார்களோ என அச்சமாக இருக்கிறது. தனது சாவின் மூலம் இன்னொருவருக்குப் பாடம் புகட்ட நினைக்கும் தவறான மனநிலை இது. நண்பனுக்கு இன்னோர் நண்பன் கிடைப்பான், தோழிக்கு இன்னோர் தோழி, காதலிக்கு இன்னோர் காதலன். இழப்பு என்னவோ இறந்தவனுக்கு மட்டுமே! இதை இளைஞர்கள் புரிந்து கொள்ள வேண்டும்.

மூன்று விஷயங்கள் முக்கியத் தேவை. விமர்சனங்களில் உடைந்து போய்விடாத மனம். அடுத்தவர்களோடு ஒப்பிட்டு தாழ்வு கொள்ளாத மனம். இணைந்து வாழும் ஆனந்த மனம். அவ்வளவு தான். இணைந்து வாழும் இளைஞர்கள் மன அழுத்தமில்லாத வாழ்க்கையை வாழ்கிறார்கள் என்கிறது உளவியல்!

இளைஞர்களுடைய மன அழுத்தம் பெரும்பாலும் அடுத்தவர்களால் நிர்ணயிக்கப்படுகிறது. முதல் மார்க் வாங்காவிட்டால் ஏதோ சாவான பாவம் செய்தது போல பிள்ளைகளைப் பார்க்கும் பெற்றோர் உண்டு. விருப்பமில்லாத படிப்புக்காய் தலையணை புத்தகங்களுடன் மன அழுத்தத்தைச் சுமக்கும் மாணவர்கள் உண்டு.

தன்னை அறிந்து, தன் ஆழ்மன விருப்பத்துக்கேற்ற ஒரு இலட்சியத்தை அமைத்துக் கொள்வதும், வெற்றியும் தோல்வியும் வாழ்வின் பாகங்கள் என புரிந்து கொள்வதுமே இளைஞர்களின் தேவை. மன அழுத்தத்தையும் இளைஞர்கள் தாண்டி விட்டால் அவர்கள் வெற்றியின் முற்றத்தை எட்டி விட்டார்கள் என்பதே பொருள்.

துருவான மனதைத் துலக்கு
வெற்றி மட்டுமே இலக்கு.

# எங்கள் பேங்க் அக்கவுண்ட் நம்பர்!

நாங்கள் Bank of Baroda வங்கியில் இரண்டு கணக்குகள் வைத்துள்ளோம். செக் அல்லது டிராப்ட் என்னுடைய பெயருக்கு எடுத்து அனுப்புவதாக இருந்தால், எங்களது அலுவலக முகவரிக்கு ரிஜிஸ்டர் தபால் அல்லது கொரியர் மூலமாக அனுப்புங்கள். வங்கிக் கணக்கின் (Account) விபரம்:

1. ACCOUNT NAME : **MR. JOSEPH OSBORNE JEBADURAI**
   ACCOUNT NO. : 49 510100003062

2. ACCOUNT NAME : **ANTANTULLA APPAM TRUST**
   ACCOUNT NO. : 49 510200000122
   BANK NAME : **BANK OF BARODA**
   IFSC CODE : BARB0KODAMB (5TH CHARACTER IS ZERO)
   SWIFT CODE : BARBINBB
   BRANCH & CODE : UNITED INDIA COLONY, KODAMBAKKAM & 4951
   CHENNAI – 600 024.

**APPAM - GOOGLE PAY : 98406 95296**

## அன்றன்றுள்ள அப்பம் வாசகர்களுக்கு!

### ஏலிம் சபைக்கு காணிக்கை அனுப்ப!

ஏலிம் சபைக்கு காணிக்கையோ, தசமபாகமோ அனுப்ப கர்த்தர் உங்களை ஏவுவாரானால், கீழ்க்கண்ட வங்கிக் கணக்குகளை பயன்படுத்துமாறு அன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

1. ACCOUNT NAME : **ELIM GLORIOUS REVIVAL CHURCH**
   ACCOUNT NO. : 49510100000230

2. ACCOUNT NAME : **MR. JOSEPH OSBORNE JEBADURAI**
   ACCOUNT NO : 49510100003063
   BANK NAME : BANK OF BARODA
   IFSC CODE : BARB0KODAMB (5TH CHARACTER IS ZERO)
   BRANCH : KODAMBAKKAM
   CHENNAI - 600024

**ELIM - GOOGLE PAY : 98848 77607**


அந்திசந்தி மத்தியான வேளைகளிலும் நான் தியானம்பண்ணி
முறையிடுவேன், அவர் என் சத்தத்தைக் கேட்பார். சங்-55:17
ஈசாக்கு சாயங்காலவேளையிலே தியானம்பண்ணுகிறார். ஆதி-24:63
Elim
GLORIOUS REVIVAL CHURCH
ஏலிம் மகிமையான எழுப்புதல் தேவாலயம்
சந்தியா கால
எழுப்புதல் ஜெபம்
(மாலை நேர ஜெபம்)
தினமும்
மதியம் 3 மணிமுதல்
5 மணிவரை
YouTube
நேரடியாகவும், ZOOM APP
வழியாகவும்
கலந்துகொண்டு
கர்த்தரின் ஆசீர்வாதத்தை
பெற்றுக்கொள்ளுங்கள்.
Pastor
OSBORNE
Jebadurai
குடும்பத்தின் ஆசீர்வாதத்திற்காகவும்,
தேசத்தின் எழுப்புதலுக்காகவும்
ஜெபிப்போம் வாருங்கள்
Meeting ID: 777 657 5174
Passcode: 112233
ELIM GLORIOUS REVIVAL CHURCH
NO. 50 RAILWAY BORDER ROAD,KODAMBAKKAM,CH - 24
CONTACT US : 9003067777,9884908777


ஏலிம் மகிமையான எழுப்புதல் தேவாலயம்
நடத்தும்
Elim
GLORIOUS REVIVAL CHURCH
சிறப்பு
சுகமளிக்கும்
ஆராதனை
ஒவ்வொரு
வியாழக்கிழமையும்
மாலை 6:30
மணிமுதல்
8:30 வரை
PASTOR
OSBORNE
Jebadurai
ஏலிம் மகிமையான எழுப்புதல் தேவாலயம்
50, இரயில்வே ஸ்டேஷன் ரோடு, கோடம்பாக்கம் சென்னை-600024.
9884916777, 9003067777




If undelivered please return to:

**Elim Glorious Revival Church**

#50, Railway Station Road, Kodambakkam, Chennai - 600024, India
for 24X7 Prayer: 91-9444322200, 9444322211
Email: enquiry@elimgrc.com, Website: www.elimgrc.com